இனிமையான குழந்தைகளே, படிப்பில் கவனக்குறைவாக இருக்காதீர்கள். அழிவற்ற ஞான இரத்தினங்களால் தனது புத்தி என்ற பையை நிறைத்துக் கொண்டே இருங்கள். அழியக்கூடிய செல்வத்தின் பின் சென்று இந்த வருமானத்தை விட்டுவிட வேண்டாம்.

கேள்வி: தந்தைக்குச் சமமான இரக்க உள்ளம் உடைய குழந்தைகளின் அடையாளங்கள் என்ன?

பதில்: 1. அவர்களுக்கு ஞானத்தின் போதை அதிகமாக இருக்கும். அவர்கள் ஞான இரத்தினங்களை தனக்குள் தாரணை செய்து பிறருக்கும் ஞான ஊசியைப் போட்டுக் (தானம் செய்துக்) கொண்டே இருப்பார்கள். அசுர வழியிலிருந்து அனைவரையும் விடுவித்துக் கொண்டே இருப்பார்கள். 2. பாபா என்ன கூறுகின்றாரோ, அவற்றை குறிப்பெடுப்பார்கள் மற்றும் அதிகாலையில் எழுந்து அதைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்வார்கள், ஞானக் கடலைக் கடைந்து (விசார் சாகர் மந்தன்) சதா மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

பாடல்: நம்முடைய தீர்த்த யாத்திரை தனிப்பட்டது......

ஓம்சாந்தி. சிவனுடைய ஜெயந்தி எப்பொழுது ஏற்படுகிறது மற்றும் பரமபிதா பரமாத்மா சிவன் எப்பொழுது அவதரிக்கின்றார் என்பதை பாரதவாசிகள் அறியவில்லை. சிவன் எப்பொழுது அவதாரம் செய்கின்றார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் கூட வரிசைக்கிரமமான முயற்சியின் அனுசாரம் அறிந்திருக்கிறீர்கள். இரவில் அவதாரம் எடுத்தார் என்று பாடுகின்றனர். ஆனால், எந்த இரவு? பொதுவான இரவு பகல் என்று உள்ளதோ, அந்த இரவா அல்லது வேறு ஏதேனும் இரவா? இதை பாரதவாசிகள் அறியவில்லை. சிவனுக்கு பதிலாக அவர்கள் கிருஷ்ணர் இரவு 12 மணிக்கு பிறப்பதாகக் காண்பித்து விட்டார்கள். சிவனை ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால் அவர் எப்பொழுது பிறப்பெடுக்கின்றார் என்பதை அறியவில்லை. சிவனது அவதார நாளானது அனைவருக்காகவும் அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய (உயர்ந்த) நாளாகும். ஏனெனில், அவர் அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் ஆவார். எப்பொழுது அனைவருக்கும் துக்கம் ஏற்படுகிறதோ அப்பொழுது ஓ! பதீத பாவனரே வாருங்கள், ஓ! இறை தந்தையே கருணை காட்டுங்கள் என்று கூச்சலிடு கின்றனர். ஹே! இறை தந்தையே, இந்த மனிதர்கள் மீது இரக்கம் காட்டுங்கள் என்று போப் கூட கூறுகிறார். இவர்கள் ஒருவரை ஒருவர் துன்புறுத்துவதற்குத் தயாராகிவிட்டனர். யாருடைய வார்த்தைகளையும் கேட்பதில்லை. அவர்களுக்கு ஈஸ்வரன் வழி காண்பிக்கட்டும். யாராவது வீட்டில் கெட்ட வழியில் செல்கிறார் என்றால் ஈஸ்வரனே இவருக்கு நல்வழி காட்டுங்கள் என்று கூறுகின்றனர். ஏனெனில், அசுர வழிப்படி நடந்து கொண்டு இருக்கின்றனர். இப்பொழுது, பகவான் யார் என்பதைக் கூட அறியவில்லை. பகவான் நிராகாரமானவர், சர்வ இடங்களிலும் நிறைந்திருப் பவர் (சர்வவியாபி) என்று கூறிவிடுகின்றனர். பின்னர், வேறு எந்த விசயமும் புத்தியில் நிலைப்ப தில்லை. பாபா எவ்வாறு சாதாரண பிரம்மாவின் உடலில் அவதாரம் எடுக்கின்றார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். பிரம்மா எங்கு பிறப்பெடுத்தார் என்பதை பாரதவாசிகள் அறியவில்லை. தாதாவின் சித்திரத்தைப் பார்த்து குழம்புகின்றனர். பிரம்மா விஷ்ணுவின் நாபியில் இருந்து

பிறவி எடுத்தார் என்று புரிந்திருக்கின்றனர். யாருடைய பிறப்பும் நாபியில் இருந்து ஏற்பட முடியாது. விஷ்ணு எங்கே இருக்கக்கூடியவர்? யாருடைய வாழ்க்கைச் சரித்திரம் (பயோகிராபி) பற்றியும் அறியவே இல்லை. பிரம்மா மூலம் விஷ்ணு அனைத்து வேதங்களின் சாரத்தைக் கூறினாரா என்ன? பிரம்மாவின் கையில் வேதம் காண்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்க முடியாது. குழந்தைகள் ஆத்ம அபிமானி ஆகி இங்கு அமர வேண்டும் என்று தந்தை புரிய வைக்கின்றார். நாம் ஆத்மா, பரமபிதா பரமாத்மா கூறுவதை இந்தக் காதுகள் மூலம் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். ஆனால் குழந்தைகள் அடிக்கடி மறந்து விடுகின்றனர். ஆத்மாக்களாகிய நம்முடன் பரமபிதா பரமாத்மா உரையாடல் செய்து கொண்டு இருக்கின்றார். யார் அனைவருக்கும் சத்கதியை வழங்கும் வள்ளலாக, ஞானக் கடலாக இருக்கின்றாரோ அவர் குழந்தைகளுக்கு அமர்ந்து கற்பிக்கின்றார். இது உங்களைத் தவிர வேறு யாருடைய புத்தியிலும் தங்குவதில்லை. ஆகையால், அந்தளவு மதிப்பும் கொடுப்பதில்லை. ஒருவேளை, பகவான் கற்பிக்கின்றார் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றால் இந்தப் படிப்பை ஒரு வினாடி கூட விட முடியாது. இந்தப் படிப்பானது அரை மணி, முக்கால் மணி நேரம் நடைபெறுகிறது. என்னை மட்டும் நினைவு செய்யுங் கள் என்று தந்தை கூறுகின்றார். இந்த ஒரு விசயத்தை ஒருபொழுதும் மறவாதீர்கள். மற்ற அனைத்தும் விஸ்தாரமானது ஆகும். வேத சாஸ்திரங்களை படிப்பது, தானம் புண்ணியம் செய்வது ஆகிய இவை போன்று என்னவெல்லாம் செய்து வந்திருக்கிறீர்களோ, அது கூட நாடகத்தில் உருவாக்கப்பட்டு இருக்கிறது என்று பாபா புரிய வைக்கின்றார். அரைக்கல்பம் ஞானம் மற்றும் அரைக்கல்பம் பக்தி. பிரம்மாவின் பகல், பிரம்மாவின் இரவு.பொதுவான இந்த இரவு பகலை மிருகங்கள் கூட அறிந்துள்ளன. ஆனால், இந்த பிரம்மாவின் பகல் இரவையோ பெரிய பெரிய வித்வான்கள் கூட அறியவில்லை.

குழந்தைகளாகிய நீங்கள் இல்லறத்தில் இருந்தாலும், தொழில் முதலியவை செய்தாலும் அவசியம் படிக்க வேண்டும். இதில் கவனக்குறைவாக இருக்கக் கூடாது. இன்ன இன்னார் கவனக் குறைவாக உள்ளார்கள் என்பதை பாபா அறிவார். தினசரி படிக்கவில்லை எனில் தோற்றுப் போய்விடுவார்கள் மற்றும் குறைவான பதவி அடைவார் கள், ஏனெனில் அழியக்கூடிய செல்வத்தின் பேராசைக்காரராக இருக்கின்றனர். அழிவற்ற ஞான இரத்தினங்கள் மீது மரியாதை இல்லை. இதை குழந்தைகளாகிய நீங்களே அறிந்துள்ளீர்கள். இந்த அழிவற்ற ஞான இரத்தினங் களே நம்முடன் வரும். யார் அதிகமாகப் பணத்தை சேர்த்து வைத்திருக்கிறார்களோ, அவர்கள் பின்னாலேயே அரசாங்கம் இருக்கிறது. எவ்வாறு மனிதர்களுக்கு மரணம் வந்தால் வெளிறிப் போய்விடுகிறார்கள், அவ்வாறே, அரசாங்க அதிகாரிகள் (அதிகம் சேர்த்த பணத்தை) எடுத்து செல்ல வருகின்றனர் என்றால் முகம் வெளிறிப் போய்விடுகிறது. குழந்தைகளே, உலகத்தின் நிலைமை என்னவாக உள்ளது என்று பாருங்கள். சமயம் மிகவும் குறைவாக உள்ளது என்று நாம் புரிய வைக்கின்றோம். இந்த மரணலோகத்தை நரகம் என்று கூறப்படுகிறது. நாங்கள் பதீதமாக இருக்கிறோம் என்றும் கூறுகிறார்கள். ஆனாலும் கூட தன்னுடைய வழிப்படி நடந்து கொண்டே இருக்கின்றனர். சாந்தியை எவ்வாறு நிலை நாட்டுவது? என்ற மாநாடு நடத்துகின்றனர். தர்மத்தினர் பரஸ்பரம் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது. ஒரு கிறிஸ்துவ தர்மத்தினரே தனது

தர்மத்தினரோடு சண்டை போட்டுக் கொண்டு இருக்கின்றனர். இப்பொழுது மனிதர்கள் அவர்களுக்கு எவ்வாறு சாந்தியை ஏற்படுத்த முடியும்? முற்றிலுமே அனாதைகளாக இருக் கின்றனர். ரிஷிகள் முனிவர்கள் கூட, நாங்கள் படைப்பாளர் மற்றும் படைப்பின் முதல், இடை, கடையைப் பற்றி அறியவில்லை என்று கூறினர். நீங்கள் தனது தந்தையை அறியவில்லையே என்று தந்தை கூறுகின்றார். எஜமானரை (மா லிக்) ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அறிந்திருக்கவும் வேண்டும் அல்லவா. பகவான், ஈஸ்வரன், கடவுள் (காட்) என்பது போன்ற வெவ் வேறு பெயர்கள் வைக்கின்றனர். உண்மையில் அவர் தந்தை அல்லவா. நம்முடைய படைப்பாளர் ஆவார், நாம் அவருடைய குழந்தைகள் ஆவோம். தந்தை, தாய் மற்றும் குழந்தைகள். நாம் ஈஸ்வரிய குடும்பம் ஆவோம். தாய் தந்தையிடமிருந்து அவசியம் ஆஸ்தி கிடைக்க வேண்டும். நாம் பரமபிதா பரமாத்மாவின் குடும்பத்தைச் சேர்நத்வர்கள். தந்தையை அனைத்து இடங்களிலும் நிறைந்து இருக்கின்றார் (சர்வவியாபி) என்று கூறிவிட்டால் குடும்பம் இருக்க முடியாது. நாம் எஜமானராகிய படைப்பாளரின் குடும்பம் ஆவோம். இன்றிலிருந்து 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் தந்தை ஆஸ்தி கொடுத்திருந்தார். நமக்கு மட்டும் அல்ல, அனைவருக்கும் கொடுக் கின்றார். நமக்கு ஜீவன் முக்தி கொடுக்கின்றார், மற்ற அனைவருக்கும் முக்தி கொடுக்கின்றார். எவ்வளவு எளிதானது! இதனுடைய குஷியானது அளவு கடந்து இருக்க வேண்டும். ஆனால், ஓஹோ! மாயா, இங்கிருந்து வெளியில் சென்றவுடன் மாயை மறக்க வைத்துவிடுகிறது. தந்தையையே மறந்துவிடுகின்றனர். இப்பொழுது நீங்கள் தந்தையினுடையவர் ஆகி இருக்கிறீர் கள். சிவபாபாவும் பிரம்மா மூலம் நம்மை தத்து எடுத்திருக்கின்றார் என்பதை நீங்கள் தான் அறிந்திருக்கிறீர்கள். பிரம்மா விஷ்ணுவின் நாபியில் இருந்து வெளிப்பட்டார் என்பது கிடையாது. இந்த சித்திரத்தை வைக்க வேண்டும் (காந்தியின் நாபியிலிருந்து நேரு வெளிப்படும் சித்திரம்). ஆனால், விஷ்ணுவின் நாபியிலிருந்து இவ்வளவு பெரிய பிரம்மா எவ்வாறு வெளிப்படுவார்? பின்னர், பிரம்மா அமர்ந்து வேதங்களின் ஞானம் கூறுகிறார் என்றால் எங்கு வைத்துக் கூறுகிறார்? சூட்சுமவதனத்தில் வைத்தா என்ன? எதுவும் புத்தியில் தங்குவதில்லை. யார் தந்தையிட மிருந்து ஆஸ்தியை அடைய வேண்டுமோ, அவர்களே இந்த அனைத்து விசயங்களைப் புரிந்து கொள்வார்கள். மற்ற அனைவரும் கற்பனை என்று கூறுகின்றனர். பாபா சத்தியத்தை உரைக் கின்றார் என்பதை இப்பொழுது குழந்தைகள் ஏற்றுகொண்டு இருக்கிறீர்கள். மேலும், பிராமணர் களாகிய நீங்கள் சென்று அனைவருக்கும் உண்மையான கீதை சொல்ல வேண்டும். அனைவரும் ஒன்று போல புரிய வைக்க இயலாது. வரிசைக்கிரமமாக இராஜ்யம் உருவாகிக் கொண்டு இருக்கிறது. அனைவரும் ஒன்று போல் கற்க இயலாது. தாரணை செய்து பின்னர் அதைப் பற்றி எண்ணங்களின் கடலைக் கடைய வேண்டும். கேட்டீர்கள், குறிப்பெடுத்தீர்கள் பிறகு அமர்ந்து சிந்தனை செய்ய வேண்டும். இன்று பாபா என்ன கூறினார். அதிகாலை எழுந்து சிந்தனை செய்ய வேண்டும். உங்களுக்கு அனைவரின் மீதும் இரக்கம் ஏற்பட வேண்டும். தனது படைப்பான மனைவி, குழந்தைகளுக்கும் கூட புரிய வைத்திடுங்கள் என்பது பாபாவின் கட்டளை ஆகும். ஆண்கள் தனது சுகத்திற்காகப் படைப்பு படைக்கின்றனர். இந்த எல்லையற்ற தந்தையோ சுகத்தை சுயம் அனுபவிப்பதில்லை. குழந்தைகளுக்காக உழைப்பு அனைத்தும் செய்கின்றேன் என்று கூறுகின்றார். எனவே, எப்பொழுது தாரணை ஏற்படுமோ அப்பொழுது போதை அதிகரிக்கும்,

பின்னர் பிறருக்கு ஞான ஊசி போட முடியும். பாபா போல் இரக்கம் உள்ளம் உடையவர் ஆக வேண்டும். அசுர வழியிலிருந்து அனைவரையும் விடுவிக்க வேண்டும். இராமர் மற்றும் இராவணனது பகைமை எவ்வளவு பெரியது. இது இராவண இராஜ்யம் ஆகும், அது இராம இராஜ்யம் ஆகும். தூய்மை ஆக்குவது யார், தூய்மையை இழக்க வைப்பது யார் என்ற எதையும் மனிதர்கள் அறியவில்லை. தந்தை எவ்வளவு நல்ல முறையில் புரிய வைக்கின்றார். புரிய வைப்பதற்காகவே இந்த சித்திரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உலகத்தின் சரித்திரம், பூகோளத்தை தந்தை தான் புரிய வைக்கின்றார். இந்த சித்திரங்களில் மிகவும் நன்றாக எழுதப்பட்டிருக்கிறது. நிராகார இறை தந்தையானவர் முழு உலகத்தின் தர்மத்தின், அரசியலின் சரித்திரம், பூகோளத்தை வந்து சொல்கின்றார் என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். கேட்பது அதிகம், ஆனால் எதையும் புரிந்து கொள்வதில்லை. உண்மையில் இந்த சித்திரங்களானது கண்ணிழந்தவர்கள் முன் கண்ணாடி ஆகும். மரம் (கல்ப விருட்சம்) மற்றும் நாடகம் ஆகிய இவை மிகவும் தெளிவாக உள்ளது. இது தந்தை புரிய வைத்து உருவாக்கி இருக்கின்றார். இந்த சமயம் அனைவரும் அஞ்ஞான உறக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகளாகிய நீங்கள் ஆன்மிக யாத்திரையில் அழைத்துச் செல்கிறீர்கள். ஆன்மிக யாத்திரீகரை உருவாக்குவதற்காக எவ்வளவு ஞானம் கொடுக்க வேண்டியதாக உள்ளது? தூய புத்தி வேண்டும். இந்த பழைய உலகிலிருந்து முற்றிலும் விடுபட்ட நிலையில் இருக்க வேண்டும். எங்கு நமது நினைவுச்சின்னம் உள்ளதோ, (தில்வாடா) அங்கேயே வந்து அமர்ந்து இருக்கிறோம். இது கூட விந்தை ஆகும். அது ஜடம் இது சைத்தன்யம் ஆகும். மிகவும் மறைமுகமான (குப்தம்) இரகசியம் ஆகும். எவ்வாறு நாம் குப்தமாக இருக்கிறோமோ, அவ்வாறு கோவில் நினைவுச்சின்னம் கூட குப்தமாக உள்ளது. கோவில் கட்டுபவர் எதையும் அறிந்திருக்கவில்லை. தந்தை உங்களுக்கு அனைத்து விசயங் களையும் புரிய வைக்கின்றார். கண்காட்சியில், வார்த்தைகள் மிக நன்றாக இருக்க வேண்டும். நீங்கள் நல்ல முறையில் புரிய வைக்கவும் வேண்டும். மனிதர் மனிதரை அறிந்து கொள்ளவும் வேண்டும். பெரிய பெரிய மனிதர்கள் வருகின்றனர், சிலர் நல்ல முறையில் புரிந்து கொள்கின்றனர், சிலரோ நன்றாக உள்ளது ஆனால் நேரம் இல்லை என்று கூறிவிடுகின்றனர். சிலர் நாளை முதல் வந்து புரிந்து கொள்கிறோம் என்று கூறுகின்றனர். நீங்கள் ஒருபொழுதும் வரமாட்டீர்கள் என்று பாபா கூறிவிடுவார். மிகவும் கடினம் ஆகும். நாம் தேவதை ஆகிக்கொண்டு இருக்கிறோம், நாம் நமது இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். நாம் இராஜ்யம் செய்வோம். ஆனால், இதை மனம் என்ற கண்ணாடியில் பார்க்க வேண்டும். நாம் இராஜா, இராணி ஆவோமா அல்லது வேலைக்காரன் வேலைக்காரியாக அல்லது பிரஜையாக ஆவோமா? மதுவனத்திற்கு வந்து அத்தகைய போதையை ஏற்றிச் செல்லுங்கள் பின்னர் அது எப்பொழுதும் நிலைத்து இருக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்காக தாய், தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. இந்த பழைய உலகத்திலிருந்து விடுபட்டு இருக்க வேண்டும். தெளிவான புத்தி உடையவர் ஆகி ஞானத்தை தாரணை செய்து பிறகு பிறரையும் தாரணை செய்விக்க வேண்டும். ஞானக்கருத்துக்களின் கடலைக் கடைய வேண்டும்.

2. தந்தைக்கு சமமாக இரக்க மனம் உடையவர் ஆகி அனைவரையும் அசுர வழியிலிருந்து விடுவிக்க வேண்டும்.

வரதானம் : மாற்றத்தின் சக்தி மூலம் நடந்து முடிந்தவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய கலங்கமற்றவராகவும் பணிவானவராகவும் ஆகுக.

மாற்றத்தின் சக்தி மூலம் முதலில் தனது சொரூபத்தை மாற்றம் செய்யுங்கள். நான் உடல் அல்ல, ஆத்மாவாக இருக்கிறேன். பிறகு சுயமரியாதையை மாற்றம் செய்யுங்கள். பழைய சுபாவத்தின் முயற்சி செய்யும் வாழ்க்கையில் ஏமாற்றம் ஏற்படுகிறது, எனவே பழைய சுபாவம் என்றாலே (பழைய உலகத்தின்) இயல்பை மாற்றிக் கொள்வதாகும். பிறகு எண்ணங்களை மாற்றி அமைப்ப தாகும். வீணான எண்ணங்களை சக்திசாலியாக மாற்றி விடுவது. இந்த முறையில் மாற்றத்தின் சக்தியினால் ஒவ்வொரு நடந்து முடிந்தற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டால் கலங்கமற்ற வராகவும் பணிவானவராக தானாகவே மாறிவிடுவீர்கள்.

சுலோகன்: நெற்றியில் நினைவு என்ற திலகம் எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டேயிருக்க வேண்டும் - இது தான் உண்மையான சுமங்கலியின் அடையாளமாகும்.

(தாதிகளின் பழைய டைரியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விலை மதிப்பு வாய்ந்த இரத்தினங்கள்)

மனிதர்களின் மதிப்பு என்பது அவர்களின் சுத்தமான புத்தி மற்றும் அசுத்தமான புத்தியை பொறுத்து அமைகிறது. சர்வ உத்தமான தேவி தேவதைகளின் குலத்தின் புத்தி சர்வ உத்தமானதாக மதிப்பு வாய்ந்ததாக இருக்கிறது. அதுபோலவே நடுத்தர (மத்திய) வர்க்கத்தின் (துவாபர் யுகத்தின்) நடுத்தரமான மதிப்பை பெறுகிறது. இதன் அடிப்படையில் கீழான வம்சத்தின் புத்தியின் மதிப்பு கீழானதாக இருக்கிறது. இந்த மூன்று சம்பிரதாயங்கள் இருக்கிறது. இந்த மூன்றிற்கும் மதிப்பு புத்தியின் அடிப்படையில் இருக்கிறது. முதலாவதாக சர்வ உத்தமமான புத்தியுடையவர்கள் பிராமண தேவி தேவதைகள் சம்பூரண ஞானத்தினால் சர்வ உத்தமமான வருமானத்தை சம்பாதித்து உலகத்திலேயே புத்திசாலிக்கான சாவி அதாவது வைகுண்டத்தின் இராஜ்யத்தை அடைந்தார்கள். அரைக்கல்பம் இயற்கையும் கூட அவர்களுக்கு பணியாட்களாக இருந்தது. ஆகை யால் நடைமுறை வாழ்க்கையில் சுகத்தை அடைந்தார்கள். மேலும் அரைக்கல்பம் அவர்களின் மூர்த்திக்கு (சிலை) கோவில்களில் பூஜிக்கப்படுகிறது,. எனவே புத்தியில் தான் முழு ஆதாரம் இருக்கிறது. ஆகையால் மிகவும் கூர்மையான புத்தி வேண்டும். தந்தையாகிய ஈஸ்வரனின் மகாவாக்கியம் - அதிவேகமாக புத்தியின் நினைவை ஈடுபடுத்தக்கூடியவர்கள் சாட்சாத் என்னுடைய சொரூபம் ஆவார்கள்.

பாபா தன்னுடைய தெய்வீக குழந்தைகளுக்கு அதிசயமான வெகுமதியை

வரதட்சனையாக கொடுக்கிறார். இப்பொழுது உங்களுக்கு எப்படிப்பட்ட வெகுமதி கிடைக்கிறது? அழிவற்ற ஞான செல்வத்தை புரிந்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் அதன் பிறகு என்ன கிடைக்கிறது? முழுமையாக அலங்கரிக்கப்பட்ட அதிசயமான வைகுண்டம், அப்படிப்பட்ட அதிசயமான வெகுமதியை உங்களுக்கு வரதட்சனையாக கிடைக்கிறது. ஏனெனில் இந்த தந்தைக்கு தனது குழந்தைகள் மீது மிகவும் அன்பு இருக்கிறது. அவர் சொல்கிறார் - அங்கு (உலகத்தில்) ஒவ்வொரு வருக்கும் அவரவர்களது தாய் தந்தையர் என்னவாக இருக்கிறார்களோ அதை தருகிறார்கள். ஆனால் நான் என்னுடைய குழந்தைகளுக்கு இப்பொழுதே கொடுத்து விடுகிறேன். எனது குழந்தைகளுக்கு அனைத்தும் கிடைத்துவிட்டால் அவர்களின் மனம் எப்படி நிறைவடையும். எனவே இந்த சொரூபத்தில் அனைவருக்கும் வைகுண்டத்தின் வெகுமதியை தருகிறேன். யார் ஞானம் நிறைந்த ஆத்மாவாக, சர்வ உத்தமமாக இருக்கிறார்களோ, அவர்களுக்கு தருகிறேன் என்பதல்ல. சர்வ உத்தமருக்கு அங்கு தொடர்பு இருக்கிறது. ஆனால் மத்தியத்தில் சர்வ உத்தம மான இருவருக்குமே கிடைக்கிறது. ஏனெனில் இந்த நேரத்தில் தெய்வீக குழந்தைகளாக இருக்கும் காரணத்தினால் ஒன்று போலவே மிக அன்பானவராக இருக்கிறார். இந்த காரணத்தினால் அப்படிப் பட்ட வைகுண்டத்தை வெகுமதியாக தருகிறேன். இதில் பிறவி பிறவிகளுக்கு அனைத்து குழந்தை களுக்கும் சுகம் அனுபவம் செய்கிறார்கள். அந்த இராயலான வம்சத்தின் மகிமையும் பூஜையும் நடைபெறுகிறது. இந்த வம்சம் இராயலாக இருப்பதால் அவர்கள் முதல் ஏ ஒன் (முதல் தரமான) மகிமை தரப்படுகிறது. பாருங்கள், கிருஷ்ணருக்கு மிகவும் வெகு விமர்சையாக மகிமை செய்யப் படுகிறது. ஐரோப்பியர்களும் இறைவன் கிருஷ்ணர் என்று சொல் கிறார்கள். கிருஷ்ணரின் பூஜாரிகள் மேலும் ஸ்ரீகிருஷ்ணரின் பெயரை எடுத்து நாங்கள் கிருஷ்ணரின் பூஜாரி என்று சொல்கிறார்கள். பூஜை செய்யக்கூடியவர்கள் பூஜாரிகளை பிராமணர்களின் டைட்டில் கொடுக் கிறார்கள். இதனால் தான் இயற்கையும் கூட அவர்களுக்கு பணியாட்களாக இருக்கிறது ஆனால் நடைமுறையில் அந்த வாழ்க்கை பிராமணர்களுக்கு கிடைப்பதில்லை, தன் மீது இந்த பெயரை மட்டும் வைத்துக் கொள்கிறார்கள். தனது பெயரை புகழ்கிறார்கள். சத்தியுகத்தின் என்னவெல்லாம் நியமங்கள் இருக்கிறதோ, அவை அனைத்தும் இங்கிருந்து தான் ஆரம்பமாகிறது. அந்த நியமங்கள் இங்கு தான் ஸ்தாபனை ஆகிறது. என்ன சட்டம் இங்கு மறைமுகமான ரூபத்தில் இருக்கிறதோ, அங்கு வெளிப்படையாக இருக்கிறது. யார் இங்கு ஞானத்தை பெறு கிறார்களோ, அவர்கள் கடைசியில் நினைவு மறுபிறவிக்கு ஆதாரமாகிறது. இங்கு செயல்படுத்தும் வழிமுறைகள், அதன் மூலம் அங்கு நடைமுறை வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கின்றனர். சிந்தனை செய்ய வேண்டிய விஷயமாக இருக்கிறது. அதனால் தான் யோசித்து அடி எடுத்து வைக்க வேண்டுமென்று சொல்லப் படுகிறது. முதலில் யோசித்து அடி எடுத்து வைப்பதில்லை, இங்கு முதலில் யோசித்த பிறகு தான் அடி எடுத்து வைக்க வேண்டும். இங்கு சிந்தனை வெளிப்படையாக (எமர்ஜ்), அடி மறைமுகமாக (மர்ஜ்) இருக்கிறது. அங்கு அடி வெளிப்படையாக இருக்கும், சிந்தனை மறைந்திருக்கும். ஒருவேளை மனிதர்களின் புத்தி மேன்மையாக இருந்தால் அனைத்தும் இருக்கும். புத்தி மிகவும் விசாலமாக இருக்க வேண்டும். இந்த தெய்வீக தந்தையின் இந்தளவு ஏன் புகழ் பாடப்படுகிறது? ஏனெனில் விசாலமான புத்தியுடைவராக இருக்கிறார். புத்தியின் மூலம் தான் மனிதர்கள் இராஜாவாகவும் புத்தியினால் தான் ஏழையாகவும் இருக்கிறார்கள். புத்தி

அனைத்து கர்மேந்திரியங் களுக்கும் தாயாக இருக்கிறது. விசாலமான புத்தியுடைய தெய்வீக ஆத்மாவின் நெற்றியில் ஜொலித்துக் கொண்டி ருக்கும். ஏனெனில் புத்தியில் முழுமையான ஞானம் நிறைந்திருக்கிறது. அவர்கள் மற்றவர்களுக்கு தனது புத்தி என்ற பெட்டகத்தில் ஞானத்தின் இரத்தினங்கள் வெளிப்படுவதால் அவர்களின் நெற்றி ஜொலிக்கிறது. இதற்காக தெய்வீக தந்தையின் மகிமை நம்பர்வார் பாடப்படுகிறது. அவர்களில் கூட தாயாக இருக்கும் தெய்வீக தந்தையாகிய பிரஜா பிதா பிரம்மாவின் மகிமை பாடப்படுகிறது. நல்லது.,